**JM II Court, Erode** **Dt.21.07.2026**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.666/2019

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 21-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.ராஜ்குமார், குற்றவியல் நீதிமன்றம் எண்.II, ஈரோடு அவர்களால் ஆணையிடப்பட்டு, திரு.T.சரவணகுமார், பலகை எழுத்தர் நிலை - III அவர்கள் மூலமாக சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

Deposition of Witness PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமலிங்கம் | தொழில் | : |
| த/க பெயர் | : | வயது | : |
| அலைபேசி | : | முகவரி | : |
| ஆதார் எண் | : | | |

**A6, A7-C/A. A1 to A5 absent. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் அந்தியூர் சின்னத்தம்பி பாளையம் கிராமத்தில் வசித்து வந்து நகலூர் அஞ்சல் நிலையத்தில் போஸ்ட் மாஸ்டராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். 24.02.2010 அன்று நகலூர் அஞ்சல் நிலையத்தில் நான் போஸ்ட் மாஸ்டராக இருந்தபோது எப்போதும் போல் அலுவலகம் சென்றிருந்தேன். மனோகரன், S/o.சுந்தரம், பெருமாபாளையம், நகலூர்,

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.07.21 10:32:39 +0530

முகவரிக்கு தபால் வந்திருந்தது. எங்களது போஸ்ட்மேன் உதயகுமார் அவரிடம் அந்த தபாலை டெலிவரிக்காக நான் கொடுத்திருந்தேன்.

மேற்படி முகவரியில் அவர் இல்லை என உதயகுமார் திரும்ப வந்துவிட்டார். மீண்டும் அதே முகவரிக்கு எடுத்துக்கொண்டு 25.02.2010 அன்று போஸ்ட்மேன் உதயகுமார் டெலிவரிக்காக சென்றார். மீண்டும் அந்த முகவரியில் அந்த நபர் இல்லை என திரும்ப வந்து விட்டார். 26.02.2010 அன்று மனோகரன், அமல்ராஜ் மற்றும், மற்றொரு நபர் வந்து போஸ்ட் மேன் உதயகுமாரை பார்த்து, நீங்கள் வரும்போது நாங்கள் அந்த முகவரியில் இல்லை என்றும், நாங்கள் தான் பாஸ்போர்ட் அப்ளை செய்தோம். அந்த முகவரிக்கு வந்துள்ளது எங்களுடைய பாஸ்போர்ட் என்று கூறினார்கள்.

அந்த போஸ்ட்மேன் உதயகுமார் அவர்களிடம் சரியான முகவரி சொல்லி வாங்கிச் செல்லுமாறு கூறினார். அதன் பிறகு மூன்று பேரும் என்னை வந்து பார்த்து நாங்கள்தான் பாஸ்போர்ட் அப்ளை செய்தோம். அந்த முகவரிக்கு வந்தது எங்களுடைய பாஸ்போர்ட் அதனால் எங்களுக்கு கொடுங்கள் என்று கூறினார்கள். சரியான முகவரி சான்று கொடுத்துவிட்டு பெற்றுச்செல்லுமாறு நான் அவர்களிடம் கூறினேன். கொண்டு வருவதாக சென்று விட்டு அவர்கள் சென்றுவிட்டனர் அதன் பிறகு அவர்கள் வரவில்லை. முகவரி சரியாக இல்லாததால் தவறான முகவரி கூறி ஏற்படும் மூன்று நபர்கள் அந்த தபாலை எங்களிடம் கேட்டதால் எங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டு காவல்துறையிடம் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். **புகார் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.21 10:32:46 +0530

அன்றைய தினம் வந்த அந்த மூன்று நபர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலுமா என்றால் 15 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதாலும், தற்போது அங்க அடையாளங்கள் மாறி இருக்கும் என்பதாலும், எனக்கு கண் பார்வை கொஞ்சம் குறைபாடு உள்ளதாலும் தற்போது என்னால் சொல்ல இயலாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**
**இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

S
RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.21 10:32:51 +0530

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.666/2019

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 21–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.ராஜ்குமார், குற்றவியல் நீதிமன்றம் எண்.II, ஈரோடு அவர்களால் ஆணையிடப்பட்டு, திரு.T.சரவணகுமார், பலகை எழுத்தர் நிலை – III அவர்கள் மூலமாக சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

Deposition of Witness PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : உதயகுமார் | தொழில் | : |
| த/க பெயர் | : | வயது | : |
| அலைபேசி | : | முகவரி | : |
| ஆதார் எண் | : | | |

**A6, A7–C/A. A1 to A5 absent. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் பவானி தாலுக்கா ஒலக்கடத்தில் வசித்து வந்து சேலம் மாவட்ட சுகாதார அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் 2009 ஆம் ஆண்டில் இருந்து நகலூர் அஞ்சல் நிலையத்தில் நான் போஸ்ட்மேனாக வேலை செய்து வந்தேன். 24.02.2010 அன்று கோயம்புத்தூர் பாஸ்போர்ட் ஆபீசிலிருந்து ஒரு ஸ்பீட் போஸ்ட்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.07.21 10:33:00 +0530

வந்திருந்தது. அதன் முகவரி மனோகரன், S/o.சுந்தரம், பெருமாபாளையம், நகலூர். அந்த தபாலை டெலிவரிக்காக போஸ்ட் மாஸ்டர் என்னிடம் கொடுத்திருந்தார்.

நான் பெருமாபாளையம் பகுதியில் விசாரித்ததில் மனோகரன் என்ற பெயரில் அந்த முகவரியில் யாரும் இல்லை என்று தெரிய வந்தது. மீண்டும் அதே முகவரி சென்று விசாரித்த போது அந்த முகவரியில் மனோகரன் என்று பெயரில் ஆள் இல்லை என விசாரித்து தெரிந்து கொண்டேன். அதை உறுதிப்படுத்திக் கொண்டு அந்த தகவலை போஸ்ட் மாஸ்டரிடம் சொன்னேன்.

26.02.2010 அன்று நானும் போஸ் மாஸ்டர் அலுவலகத்தில் இருந்தபோது, மனோகரன், அமல்ராஜ் மற்றும், பார்த்திபன் ஆகியோர் வந்து என்னிடம் நேற்று நீங்கள் வந்து பதிவு தபால் குறித்து விசாரித்த போது நான் வீட்டில் இல்லை என மனோகரன் என்னிடம் கூறி, அந்த பாஸ்போர்ட் உள்ள தபாலை கொடுங்கள் என கூறினார். அவரிடம் நான் அந்த பகுதியில் விசாரித்ததில் மனோகரன் என்ற பெயரில் மேற்படி முகவரியில் ஆள் இல்லை என தெரிய வந்ததால் உண்மையான முகவரி சான்று கொடுத்தால் நான் தபால் தருவதாக கூறினேன்.

அதன் பிறகு அவர்கள் போஸ்ட் மாஸ்டரை சென்று சந்தித்ததாக கூறினார்கள். அவரிடம் பாஸ்போர்ட் தபாலை கொடுக்குமாறு கூறிய போது முகவரி சான்று கொடுத்தால், அந்த தபாலை நீங்கள் வாங்கிச் செல்லலாம் என கூறினார். முகவரி சான்று கொண்டு வந்து கொடுத்து வாங்கிக் கொள்கிறோம் என்று கூறிச் சென்றவர்கள், அதன்பிறகு அவர்கள் வரவில்லை.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.21 10:33:07 +0530

அதன் பிறகு போஸ்ட் மாஸ்டர் பதிவு தபாலில் வந்த முகவரியில் ஆள் இல்லை, ஆனால் மேற்படி நபர்கள் வந்து கேட்பதாலும் பதிவு தபாலில் உள்ளது பாஸ்போர்ட் என்பதாலும் சந்தேகமாக உள்ளதாக கூறி அதை வைத்து சட்டவிரோதமாக ஏதாவது நடைபெற்று விடக்கூடாது என்பதால் போஸ்ட்மாஸ்டர் காவல்துறையிடம் புகார் அளித்தார். அன்றைய தினம் வந்த அந்த மூன்று நபர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலுமா என்றால் ரொம்ப வருடங்கள் ஆகிவிட்டதாலும், நான் ஒரு முறை தான் அவர்களை பார்த்ததாலும், எதிரிகளை பார்த்தால் ஞாபகம் வரலாம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.21 10:33:12 +0530

JM II Court, Erode Dt.21.07.2026

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.666/2019

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 21-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.ராஜ்குமார், குற்றவியல் நீதிமன்றம் எண்.II, ஈரோடு அவர்களால் ஆணையிடப்பட்டு, திரு.T.சரவணகுமார், பலகை எழுத்தர் நிலை - III அவர்கள் மூலமாக சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

Deposition of Witness PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மகாலிங்கம் | தொழில் | : |
| த/க பெயர் | : | வயது | : |
| அலைபேசி | : | முகவரி | : |
| ஆதார் எண் | : | | |

**A6, A7-C/A. A1 to A5 absent. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் மாறனூர் கிராமத்தில் வசித்து வந்து தற்போது விவசாயம் செய்து வருகிறேன். நான் இந்த வழக்கு சம்பவத்தின் போது இந்திய பாளையம் கிராமத்தில் 2009-2010 ஆண்டில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். பிப்ரவரி மாதம் 2010 ஆண்டு நானும், கிராமம் உதவியாளர் ஏசுதாஸ் என்பவரும் கள ஆய்வுக்காக செல்வதற்காக அரசூர் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தோம். அப்போது ஈரோடு போலீசார்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.07.21 10:33:20 +0530

எங்களிடம் வந்து எங்களுக்கு எதிர்ப்புறம் நின்று கொண்டிருந்த மூன்று நபர்களை கைது செய்வதாகவும், நான் அந்த பகுதி VAO என்பதால் கைது செய்வதற்கு உதவியாக இருக்கும் படி போலீசார் கேட்டுக் கொண்டனர். அப்போது மதியம் ஒரு மணிக்கு மேல் இருக்கும். அங்கிருந்த மூன்று நபர்களிடம் ஏதோ ஒரு வழக்கு சம்பந்தமாக வாக்குமூலம் வாங்கினார்.

பார்த்திபன், மனோகரன் மற்றும் மற்றொரு நபர் அந்த மேற்படி மூன்று நபர்கள் ஆவார்கள். பாஸ்போர்ட் சம்பந்தமாக விசாரித்து போலீசார் எழுதி வாங்கினார். போலி பாஸ்போர்ட் சம்பந்தமாக அவர்கள் மூன்று பேரும் ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளித்தனர்.

அதில் நானும் ஏசுதாசும் சாட்சிக் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஐந்தாம் எதிரி அமல்ராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **இந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

போலீசரின் விசாரணையில் எதிரி அமல்ராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ரேஷன் கார்டு, லைசென்ஸ் உட்பட 20 –30 ஆவணங்களை எங்கள் முன்னிலையில் போலீசார் கைப்பற்றினர். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

விஜய் என்பவரின் TC நகல், மனோகரன் என்பவரின் TC நகல், வேலுச்சாமி என்பவரின் குடும்ப அட்டை நகல், ஆகியவை **அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **ஜி5 செல்போன் சில்வர்**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.21 10:33:26 +0530

**கலர் சிம் உடன் கூடியது சான்று பொருள்–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

தற்போது என்னிடம் காட்டப்படும் ஏழாம் எதிரி **மனோகரன்** கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **இந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

எதிரி மனோகரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் செல்போன் பணம் ரூபாய் 500 மற்றும் 10 ரூபாய் தாள்கள் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் போலீசார் கைப்பற்றினர். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**சிம்முடன் கூடிய நோக்கியா செல்போன் சில்வர் கலர் சா.பொ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பணம் ரூபாய் 1545/–** ( 3– 500 ரூபாய் தாள்கள், 4– 10 ரூபாய் தாள்கள், 1– 5 ரூபாய் தாள்) **சா.பொ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அதன் பிறகு போலீசார் எதிரிகளை அழைத்துக் கொண்டு சென்றனர். நானும்,ஏசுதாசும் அவர்கள் பின்னால் சத்தியமங்கலம் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள ஒரு பேக்கரிக்கு சென்றோம். அங்கு மேற்சொன்ன மூன்று நபர்களும், அங்கு நின்று கொண்டிருந்த இரண்டு நபர்களை அடையாளம் காட்டினார்கள். அந்த இரண்டு நபர்களின் பெயர்கள் வடிவேல் மற்றும் விஸ்வநாதன் ஆகும்.

வடிவேல் மற்றும் விஸ்வநாதன் ஆகியோரும் போலீசாரிடம் தங்களது குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அவர்கள் இருவரும் குற்றத்தை

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.21 10:33:32 +0530

ஒப்புக்கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தனர். நானும் ஏசுதாஸ் அதில் சாட்சி கையொப்பம் செய்தோம்.

**முதலாம் எதிரி வடிவேலு** கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த வாக்காளர் அடையாள அட்டை குடும்ப அட்டை உள்ளிட்ட ஆவணங்களை போலீசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்களான

1.மாணிக்கம் என்பவரின் பெயரில் உள்ள போலியான குடும்ப அட்டை,

2.மேகன் என்பவரின் பெயரில் உள்ள போலியான குடும்ப அட்டை,

3.வாசு என்பவரின் பெயரில் உள்ள போலியான குடும்ப அட்டை,

4.வாசு என்பவரின் பெயரில் உள்ள போலியான வாக்காளர் அடையாள அட்டை,

5.மனோகரன் என்பவரின் பெயரில் உள்ள போலியான வாக்காளர் அடையாள அட்டை,

6.மோகன் என்பவரின் பெயரில் உள்ள போலியான வாக்காளர் அடையாள அட்டை,

7.நாகராஜ் என்பவரின் பெயரில் உள்ள போலியான வாக்காளர் அடையாள அட்டை,

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.21 10:33:41 +0530

8.முருகன் என்பவரின்  பெயரில் உள்ள போலியான  வாக்காளர் அடையாள அட்டை,

9.அசோக் என்பவரின்  பெயரில் உள்ள போலியான வாக்காளர் அடையாள அட்டை,

10.வாசு என்பவரின்  பெயரில் உள்ள போலியான ஓட்டுநர் உரிமம்,

**11.Vodaphon SIM–1,**

**12. BSNL Sim –1**

**13.** அசோக் என்பவரின் புகைப்படத்துடன் கூடிய இந்தியன் வங்கி கணக்கு புத்தகம்

14.அசோக் என பெயரிடப்பட்ட பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்கள் எண்ணிக்கை 7 .

15.வாசு என்பவரின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்கள் எண்ணிக்கை–5,

16.மோகன்  என்பவரின் பெயரில் உள்ள போலியான டிசி,

17.வாசு என்பவரின் பெயரில் உள்ள போலியான டிசி

18.அசோக்  என்பவரின் பெயரில் உள்ள போலியான டிசி நகல்,

19. ராஜா  என்பவரின் பெயரில் உள்ள போலியான டிசி நகல்,

20.பிரபு  என்பவரின் பெயரில் உள்ள போலியான டிசி நகல்,

21.சாமிநாதன்  என்பவரின் பெயரில் உள்ள போலியான  குடும்ப அட்டை நகல்,

22.வாசு  என்பவரின் பெயரில் உள்ள போலியான  குடும்ப அட்டை நகல்,

23.தன்ராஜ்  என்பவரின் பெயரில் உள்ள போலியான  குடும்ப அட்டை நகல்,

24.வாசு  என்பவரின் பெயரில் உள்ள போலியான   ஓட்டுனர் உரிமம் நகல்,

25.முருகன்  என்பவரின் பெயரில் உள்ள போலியான  **Voter ID** நகல்,

26. அசோக்  என்பவரின் பெயரில் உள்ள போலியான   வாக்காளர்

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.21 10:33:48 +0530

அடையாள அட்டை நகல், 27.முருகன் என்பவரின் பெயரில் உள்ள போலியான வாக்காளர் அடையாள அட்டை நகல், 28.ராஜா என்பவரின் பெயரில் உள்ள போலியான வாக்காளர் அடையாள அட்டை நகல்,

29. நோக்கியா கருப்பு கலர் செல்போன் சிம் உடன் கூடியது ஒன்று.

30. SIGMATEL என்ற பெயரில் உள்ள கருப்பு கலர் செல்போன் ஒன்று,

31. பணம் ரூ 675/- (500*1, 100*1, 20*1, 10*5, 5*1 = 675) ஆகியவை என் முன்னிலையில் முதலாவது எதிரி வடிவேல் என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் ஆகும்.

**மேற்படி வரிசையில் 1 முதல் 10 ஆவணங்கள் அ.சா.ஆ.11 முதல் அ.சா.ஆ.20 வரை குறியீடு செய்யப்படுகிறது. 13 முதல் 28 ஆவணங்கள் அ.சா.ஆ.21 முதல் 36 வரை குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட SIM-2 , செல்போன்கள்-2, பணம் ரூ.675 ஆகியவை சா.பொ 4 முதல் சா.பொ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**இரண்டாம் எதிரி விஸ்வநாதன்** கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.37 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. விஸ்வநாதன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வாக்காளர் அடையாள அட்டை, லைசென்ஸ் உள்ளிட்ட ஆவணங்களை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் போலீசார் கைப்பற்றினர். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.38 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**மனோகரன் என்பவரின் போலியான வாக்காளர் அடையாள அட்டை நகல், வாசு என்பவரின் போலியான வாக்காளர் அடையாள அட்டை நகல், விஜய் என்பவரின் போலியான வாக்காளர் அடையாள அட்டை நகல், சுந்தரம்**

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.21 10:33:58 +0530

**என்பவரின் குடும்ப அட்டை நகல்(2), அ.சா.ஆ.39 முதல் 42 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**ப்ளூடூத் என்ற பெயரில் உள்ள கருப்பு நிற செல்போன் சிம்முடன் கூடியது சா.பொ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ரூபாய் 1000 சா.பொ.10 குறியீடு செய்யப்படுகிறது.**

இந்த வழக்கின் எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலமா என்றால் 16 வருடங்கள் ஆகிவிட்டதாலும், அவர்களை ஒரே முறை தான் நான் பார்த்ததாலும், அவர்களை பார்த்தால் அடையாளம் காட்டலாம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.21 10:34:04 +0530